செ.வெ.எண்:04 நாள்:01.03.2017

**பத்திரிக்கை செய்தி**

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் அரசின் வழிகாட்டுதல்களின்படி ஆசிரியர் தகுதித் தேர்வு தாள்–1 மற்றும் தாள்–2 முறையே 29–04–2017 மற்றும் 30–04–2017 ஆகிய நாட்களில் நடைபெற உள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் கரூர் மாவட்டத்தில், முதன்மைக் கல்வி அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ள கீழ்காணும் மையங்களில் 06–03–2017 முதல் 22–03–2017 வரையுள்ள நாட்களில் (ஞாயிற்றுக்கிழமை தவிர) காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை விற்பனை செய்யப்பட உள்ளன. விற்பனை மையங்கள் தொடர்பாக, மாவட்ட வாரியான விவரங்கள் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்திலும் காணலாம். ஒரு விண்ணப்பக் கட்டணம் ரூ.50/–ஐ தொகையாக அளித்து விண்ணப்பத்தினை விற்பனை மையங்களில் பெற்றுக் கொள்ளலாம். ஒரு நபருக்கு ஒரு விண்ணப்பம் மட்டுமே வழங்கப்படும். தாள்–1 மற்றும் தாள்–2 ஆகிய இருதேர்வுகளை எழுத விரும்பும் விண்ணப்பதாரர் தனித்தனியான விண்ணப்பங்களில் விண்ணப்பிக்க வேண்டும்.

| வ.எண் | விண்ணப்பம் விற்பனை செய்யப்படும் இடங்கள் |
|---|---|
| 1 | நகராட்சி குமரன் உயர்நிலைப் பள்ளி, கரூர்–639002 |
| 2 | நகராட்சி கோட்டமேடு உயர்நிலைப் பள்ளி, கரூர்–639002 |
| 3 | சி.எஸ்.ஐ. மகளிர் மேல்நிலைப் பள்ளி, கரூர்–639002 |
| 4 | மார்னிங் ஸ்டார் உயர்நிலைப் பள்ளி, கரூர்–639002 |
| 5 | அரசு உயர்நிலைப் பள்ளி, மாயனூர்–639108 |
| 6 | அரசு உயர்நிலைப் பள்ளி, திம்மாச்சிபுரம்–639105 |
| 7 | அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, அரவக்குறிச்சி–639201 |
| 8 | அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, இராச்சாண்டார்திருமலை–621313 |
| 9 | அரசு உயர்நிலைப் பள்ளி, நாகனூர்–621313 |
| 10 | அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி, தரகம்பட்டி–621311 |
| 11 | அரசு மேல்நிலைப் பள்ளி, ஜெகதாபி–639118 |

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கரூர் மாவட்டத்தில், முதன்மைக் கல்வி அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் மையத்தில் 06–03–2017 முதல் 23–03–2017 வரையுள்ள நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை (ஞாயிற்றுக் கிழமை தவிர) திரும்ப பெறப்படும். விண்ணப்பங்கள் வாங்கப்பட்ட மாவட்டங்களிலேயே திரும்ப அளிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஒரு மாவட்டத்தில் விண்ணப்பம் பெறப்பட்டிருப்பினும் மற்றொரு மாவட்டத்தில் பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை அளிக்கலாம்.

| வ.எண் | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் திரும்ப பெறப்படும் இடங்கள் |
|---|---|
| 1 | மாவட்டக் கல்வி அலுவலர்,<br>மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகம்,<br>மாவட்ட ஆட்சியரகம்,<br>கரூர்–639007. |

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கரூர்.